சிவமயம்.

திருக்கைலாசபரம்பரைச்சந்தானகுரவருள்

ஒருவராகிய,

மெய்கண்டதேசிகர்மாலை.



இது

ஸ்ரீகைலாசபரம்பரைத்திருவாவடுதுறை ஆதீனத்து,

ஸ்ரீசுப்பிரமணியதேசிகமூர்த்தி

அருளிச்செய்தது

ஷை ஆதீனத்தைச்சேர்ந்த

திருப்பெருந்துறைக்கட்டளை

சுப்பிரமணியசுவாமிகள்

வேண்டுகோளின்படி,

மதுரையில்வசித்திருக்கும்

இ, இராமசுவாமிப்பிள்ளை

என்றுவழங்குகின்ற,

ஞானசம்பந்தப்பிள்ளையால்

பரிசோதித்து

சென்னபட்டணம்

வித்தியாவிர்த்தியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.



விக்கிரம௵ சித்திரை௴.

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்.

மெய்கண்டதேசிகர்மாலை.

கட்டளைக்கலித்துறை.

பூவேபொன்பூவின்மணமேமண புதுப்பூங்கற்பகக்
காவேயென்றிருக்கண்ணேயென்கண்ணுடைக்கருமணியே
கோவேகுணக்குன்றமேயெனையாண்டசுகோதயமே
தேயேதிருவெண்ணெய்மெய்கண்டநாதமெய்த்தேசிகனே (௧)

மெய்வாய்கண்மூக்குச்செவிவழியேசெல்விடயமைந்தி
னைவாய்க்கப்படுமிப்போனமயங்குமருவினையேற்
குய்வாய்மைகாட்டிவினைவீட்டியின்பமுறக்கருணை
செய்வாய்திருவெண்ணெய்மெய்கண்டநாதமெய்த்தேசிகனே (௨)

ஊனேயவ்வூனினுயிரேயுயிர்க்குயிரேயுணர்வே
யானேமறைப்பொருளேயருளேவடிவாகியவெங்
கோனேயென்றறியானினதாகவுங்கூட்டுவையோ
தேனேதிருவெண்ணெய்மெய்கண்டநாதமெய்த்தேசிகனே (௩)

பார்த்தவிடமெங்குநாயேற்குவேற்றுமுகப்படுமெற்
றூர்த்தவறிவினார்நேயமுமவ்வேமமெனக்காமீருளிற்
கூர்த்தமெய்வேடமுமப்படியேயென்கொடுமையிதைத்
தீர்த்தெனையாண்டருண்மெய்கண்டநாதமெய்த்தேசிகனே, ()

முற்பவமவந்தவரலாறுமுற்றுமுடிந்ததற்பி
னுற்பவமவந்தவரலாறுமோர்கிலனுண்மையென்னே
யற்புதவிகாரகவானந்தரூபவருட்செல்வமே
சிற்பரசின்மயமெய்கண்டநாதமெய்த்தேசிகனே. (௫)

உன்மத்தமாயைக்குமுன்னதுகன்மமெனவுரைப்பார்
கன்மத்தின்முன்னதுமாயையென்பார்கலங்காதருளாய்
தன்மத்தைமுன்னிட்டமூன்றுமுணருந்தபோதனர்க்குச்
சின்முத்திரையருண்மெய்கண்டநாதமெய்த்தேசிகனே. (௬)

சுந்தரமானமுகதாமரையுஞ்சுரந்தவரு
ளூர்ந்தியபார்வையுஞ்சின்முத்திரைக்கையுமோங்குமின்பஞ்
தந்தருண்மேனியும்பாதாரவிந்தமுமாய்த்தமியேன்
சிந்தைகுடிகொண்டமெய்கண்டநாதமெய்த்தேசிகனே. (௭)

ஆறுகிலேனென்கவலையெலாநினதஞ்செழுத்தைக்
கூறுகிலேனின்னருட்பெருக்கத்தைக்குறித்துணர்ந்துள்
ளூறுகிலேனின்னருளெனைக்காக்குமென்றுண்மையதாத்
தேறுகிலேன்வெண்ணெய்மெய்கண்டநாதமெய்த்தேசிகனே (அ)

அறிவாலறிதற்கடங்காதபேரொளியாகியெங்கு
நிறைவாய்ப்பரமசுகமாகிநேயமிலாருளத்திற்
பிறிவாயடியருளத்தமுதாய்ப்பெரிதாகுமின்பச்
செறிவாந்திருவெண்ணெய்மெய்கண்டநாதமெய்த்தேசிகனே (௯)

கருவினையெய்தச்செயுமாணவத்துக்குங்காரணமா
மிருவினைநின்றநிலைமைமற்றுண்மையெல்லாமொருசொற
பொருளினதாகவமைத்தருண்ஞானப்பொருட்சுவையாய்த்
திருவெண்ணெய்மேவியமெய்கண்டநாதமெய்த்தேசிகனே. (௰)

திருச்சிற்றம்பலம்.

மெய்கண்டதேவாதிருவடிவாழ்க.

சிவஞானயோகிகள்திருவடிவாழ்க



உ

சிவமயம்.

திருகைலாசபரம்பரைத்திருவாவடுதுறை ஆதீனத்து,

பிரதமாசாரியராகிய,

பஞ்சாக்கரதேசிகர்மாலை.

அவ்வாதீனத்து,

திராவிடமகாபாஷ்யகர்த்தராகிய,

சிவஞானயோகிகள்

அருளிச்செய்தது.

ஷை ஆதீனததைசசேர்ந்த

திருபபெருந்துறைககட்டளை

சுப்பிரமணியசுவாமிகள்

வேணடுகோளின்படி,

மதுரையில்வசித்திருக்கும

இ, இராமசுவாமிப்பிள்ளை

என்றுவழங்குகின்ற,

ஞானசம்பந்தப்பிள்ளையால்

பரிசோதித்து,

சென்னபட்டணம

வித்தியாவிர்த்தியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

விக்கிரம௵ சித்திரைமீ.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

பஞ்சாக்கரதேசிகர்மாலை.

கட்டளைக்கலித்துறை.

அறிவேயருட்செல்வமேநிறைவேயரசேயடியா
ருறவேயென்னாருயிரேமணியேயுருகாதநெஞ்சிற
பிறிவேதுரியங்கடந்தசிவானந்தப்பேரமுதச்
செறிவேகருணைப்பிழம்பேபஞ்சாக்கரதேசிகனே.

பொய்யுங்கவடுங்கொடுமையும்வஞ்சமும்பூண்டபொல்லாக்
கையன்கலதிமுழுமூடனேனுநின்கண்ணருளா
லுய்யும்படியென்றுகூடுமெந்தாயுண்மையாளரன்பு
செய்யுந்துறைசையுட்டேவேபஞ்சாக்கரதேசிகனே (௨)

பரிசறியேனருட்பண்பறியேனெனைப்பற்றும்வினைக்
கரிசறியேனதுமாற்றறியேன்கலரோடிணங்கித்
துரிசுகளேசெயும்பொல்லாவுலகத்தொழும்பனுக்குன்
றரிசனங்கிட்டுவதென்றோபஞ்சாக்கரதேசிகனே. (௩)

மருவேனுனதடியார்திருக்கூட்டமருவிவஞ்ச
மொருவேன்மகளிர்விழிக்கடைநோக்குக்குளம்பதைத்து,
வெருவேனடிமையுமென்னாளுனதருண்மேவுவனோ
திருவாவடுதுறைத்தேவேபஞ்சாக்கரதேசிகனே. (௪)

ஆனந்தவாழ்விலடியாரெல்லாருமகங்களிப்ப
நானிந்தமாயத்தொடக்கினில்வீழ்ந்துநலிதனன்றோ
வானந்தநீண்டமதிலாவடுதுறைவாழ்முதலே
தேனுந்துபங்கயத்தாளாய்பஞ்சாக்கரதேசிகனே. (௫)

வற்றாக்கருணைத்திருநோக்குநின்முகமண்டலமுஞ்
சற்றேமுகிழ்த்தகுறுமூரலுந்தடமார்பழகும்
பொற்றாளுஞ்சின்முத்திரையுநெஞ்சூடுபொறித்துவைப்பாய்
செற்றார்புரஞ்செற்றதேவேபஞ்சாக்கரதேசிகனே. (௬)

தேறாதநெஞ்சுந்தெளியாதசிந்தையுந்தேங்கியின்ப
மூறாதகண்ணுமொழியாக்கவலையுமுன்புகழே
கூறாதநாவுமெனக்கேதகுமென்றுகூட்டினையே
சீறாதருள்செயுந்தேவேபஞ்சாக்கரதேசிகனே. (எ)

நின்னருளுக்கினுக்கெவ்வளவேனுநெகிழ்ந்துருகா
தென்னுடைவன்மனமின்னார்விழிக்கடைக்கென்னிலந்தோ
வன்னியினேர்மெழுகாயுருகாநிற்குமாயமென்னே
செந்நெறியாய்நின்றதேவேபஞ்சாக்கரதேசிகனே. (அ)

பிறவித்துயரினியாற்றேனடைக்கலம்பேயுலகின்
மறுகித்திரிந்தலைந்தெய்த்தேனடைக்கலமங்கைநல்லா
ருறவைத்தவிர்த்துய்யக்கொள்வாயடைக்கலமுண்மையன்பர்
செறிவுக்குள்வாழுமெய்த்தேவேபஞ்சாக்கரதேசிகனே (௯)

இருவினைதாமிவைமும்மலமீங்கிவையீதுசிவங்
கருவுறுமாருயிருண்மையிதுவென்றுகாட்டவல்ல
குருபரனீயன்றிவேறறியேனிக்குவலயத்திற்
றிருவெண்ணெய்மெய்கண்டதேவேபஞ்சாக்கரதேசிகனே (௧௦)

திருச்சிற்றம்பலம்

மெய்கண்டதேவர் திருவடிவாழ்க

சிவஞானயோகிகள்திருவடிவாழ்க

உ

சிவமயம.

திருக்கைலாசபரம்பரைத்திருவாவடுதுறை ஆதீனத்து,

பிரதமாசாரியராகிய

பஞ்சாக்கரதேசிகரந்தாதி.

இது

அவ்வாதீனத்து,

கச்சியப்பசுவாமிகள்

அருளிச்செய்தது

ஷை ஆதீனத்தைச் சேர்ந்த

திருப்பெருந்துறைக்கட்டளை

சுப்பிரமணியசுவாமிகள்

வேண்டுகோளின்படி,

மதுரையில்வசித்திருக்கும்

இ. இராமசுவாமிப்பிள்ளை

என்றுவழங்குகின்ற,

ஞானசம்பந்தப்பிள்ளையால்

பரிசோதித்து,

சென்னபட்டணம்

வித்தியாவிர்த்தியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.



விக்கிரம௵ சித்திரை௴.

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்.

பஞ்சாக்கரதேசிகரந்தாதி.

—— o ——

கட்டளைக்கலித்துறை

திபசுபாசந்தைப [illegible] பசுபதியாகியோரீஇப்
பதிபசுவாகப் பசுபதியாக்கிப் பின்னும் பயிற்றிப
தியெனத் தானுய்ப் பயிலுந் திருவாவடுதுறைசைப்
பதிவளர் பஞ்சாக்கரவனை யென்சொல்லிப் பாடுதுமே (க)

பாடுதும் பஞ்சாக்கரவனை யென்றுபடாங் கலொடுங்
கூடுவதன்னவன் பாதமது வந்து கூடுதலு
நீடுவதின்ப மனவாக்குக் காய நிகழ்செயலற
றோடுவ வாளாங் கிருப்ப தல்லாற் பின்னை யொன்றில்லையே (உ)

ஒன்றில்லையாகவுயிருளதாகவுருவங்கொண்டு
தன்றில்லையாடிதுறைசையிற்பஞ்சாக்கரவன்சென்று
னன்றில்லையாதியென் றுன்னினற் யான்சென்றுநின் றிறனு
ன்றில்லைநீயதுமில்லைசொல்லா வொன்றுநண்ணியதே (௩)

நண்ணியபாசஞ்சடமாணவமற் றுனெனவே
எண்ணுவதின்றுயிரொன்று முணர்ந்துங் கதியறிவைத்
திண்ணியபாசவறிவு பசுவறிவென்றுசெப்பி
யெண்ணுவதென்னை யியம்பாய பஞ்சாக்கரவின் குருவே (௪)

குருவாயருள லுயிராக்கின் மையாருங் குறிக்கொடியய
வருவாயருவுருவாயுருவாயவை தானெனாற
பெருவான்பொருடன்பெரும பெயரேபெயராகவந்த
வொருவாய்மைதனை நினையினுமுள்ளமுருகுவதே. (௫)

உருகுங்கருணைப்பெருந்திறநோக்கியுலைமெழுகாய்ப்
பருகுந்தணப்பறவானந்தத்தேறல்பமரமெனத்
திருகுமவினையின் றிருக்கறுந்தாண்டுதன் சேவடிக்கீழ்த்
தருகின்றபஞ்சாக்கரவனொடாடியதாழ்குழலே. (௬)

தாழ்கின்றகூந்தன்மலர்சூட்டித்தையலர்த்தோயுமின்பத்
தாழ்கின்றவென்னைத்தன்பாதத்திலார்வமளித்துளத்தைப்
போழ்கின்றவைம்பொறிபோழ்ந்துபஞ்சாக்கரபூரணன்மெய்
வாழ்கென்றுசென்னிமலர்க்கைவைத்தானின்பமல்கியதே. (௭)

மல்கியசஞ்சிதக்காட்டையெரிவாய்மடுத்துடலிற்
புல்கியவின்பத்துன்பங்களெல்லாம்பின்புபூப்பதின்றி
யல்கியபஞ்சாக்கரதேசிகனருளாற்கவர்ந்து
நல்கியவாய்மைக்குக்கைம்மாறுகண்டிலனல்குநர்க்கே (௮)

நல்குந்தொழிலெனக்கேயன்றியில்லாவத்தகைசீர்
பல்குந்துறைசைப்பஞ்சாக்கரதேவன்பணித்திடுஞ்சொன்
மெல்குந்திறமெனக்குள்ளதஞல்வினைகின்றவெல்லா
தொல்குந்திறமின்றுகாட்டினன்யானெனதோடியதே (௯)

ஓடியதாணவமுற்றதுபாசகன்மங்களொற்று
வாடினபல்வகைத்தோற்றமலரயன்மான்முதலோர்
வீடினர்செய்கைவிளைந்ததுபோசம்வியன்றலைநை
நீடியபஞ்சாக்கரவன்முகிழ்த்தநிலாநகைக்கே. (௧௦)

நகைக்கின்றசெங்கனிவாயுமெதிர்த்தோர்நலமுழுதுந்
துகைக்கின்றபோருட்பார்வையுமுட்பலத்தொக்குவிட்ட
நகைக்கின்றசின்முத்திரையுந்தனிச்சரப்புத்தகமு
முகைக்கின்றவாலென்னைப்பஞ்சாக்கரவள்ளனுழங்கழற்க

கழற்காலரவிந்தங்கைகூப்பப்பஞ்சாக்கரவனெஞ்சோ
னழற்காலனைவந்துசாரவொட்டான்றுறைசைப்படைப்பாம்
புழற்காலரவிந்தப்புத்தேனொடலோட்டான்புனலேயங்
குழற்கானவாயற்கிடமினியாதென்னைக்கொள்கையனே (௧௨)

கையம்புமூவுலகுண்டதுகண்மலரோன்றுண்டதா
லையம்புவேணியமலன்பஞ்சாக்கரவள்ளனல்பொற்று
ணையம்புயாறயிராட்டிவணங்கியநேயரொன்று
மெய்யம்பிறவெனவெல்லாமெடுத்துவிழுங்கியதே (௧௩)

விழுங்கிக்கிடந்தவொளியறல்பார்த்துமிடையிருள்போ
லொழுங்கிக்கிடந்தவெனுள்ளத்தொழிவுகண்டோங்கிருளு
மழுங்கக்கடைக்கணித்தாண்டான்பஞ்சாக்கரவண்ணலினிப்
புழுங்கக்கடவதொன்றில்லையெஞ்ஞான்றும்புணர்ப்பன்றியே. ( )

அப்பியசீர்த்தமடுத்தான்சடைக்கண்டஞ்செழுமா
மெற்றன்றியவோரைகபடுத்தான்செவிக்கணுலகமுற்றுங்
கன்றியவாலமடுத்தான்களத்துக்கருதியென்னை
வென்றியபாதமடுத்தான்பஞ்சாக்கரமெய்த்தவனே. (கரு)

தவமாய்த்தவம்புரிவாருய்த்தவப்பயனைக்கொடுக்கு
மவனுயிர்க்குப பஞ்சாக்கரமூர்த்தியையார்த்தவா
னவமார்தொழிற்குவாமுதப்போலருண்ஞானநல்கிப்
பவமாய்க்கவர்ந்தபவபரிபாமையிருந்திடினே. (கசு)

இருந்திடற்பஞ்சாக்கரவன்பதந்திடையான்மலமு
மிருந்திடுஞ்சார்பொழிறைநகேயெழுந்தினிநீயெனக்கு
விருந்தெனவாய்ப்பெயுமீட்டுமிராமைவிடுப்பினந்தோ
பொருந்திடுமெல்லாமவன்பெயர்பொன்மொனயோதுவதே. (கஎ)

துவராகியபஞ்சாக்கரன்பெயரொண்மறையின்
மீதுவதிவதுநட்போடிகலைவிளக்குவதும்
போதுவதும்பின்புணர்வதுமுன்னுய்ப்புணாமயக்கங்
காதுவதுங்கழுன்றுள்ளதுமெல்லாங்கருதிடினே (கஅ)

கருதிடுமென்னைத்தன்னுள்ளேயிருந்துகடிப்பின்மலம
பொருதிடுமபோகபபுணர்ப்பாயிருக்கும்புணாதவந்தா
லிருதிடுமாமெய்தார்க்கிருளாயேயிருக்குமருள்
விருதிடுமபஞ்சாக்கரவன்விளைப்பூங்கழற்றுணையே. (ககூ)

துணைமாமுலையுமைகாணச்சுடர்மணியம்பலத்தே
யிணையாவருமின்றியாடும்பஞ்சாக்கரவெந்தைபிரா
னணையாவெனையணைப்பான்பிறகேசெல்லுமாறருளே
புணையாப்பவக்கடலேந்றியவாறற்புதநெஞ்சமே. (உ0)

நெஞ்சேயுறுதியறிந்திலேபோலுநினைப்பினங்கே
யஞ்சேலெனநின்றருளும்பஞ்சாக்கரவண்ணலிரு
செஞ்சேவடியையிகந்தயலேபுலன்சென்றுபற்றி
நஞ்சேயனையவினைவழிச்சேறனயந்தனையே. (உக)

நயந்தருநல்லவந்தான்மகிழ்வாய்நல்லவல்லநெஞ்சே
பயந்தரிஞங்கேபணிப்பாயறிந்தநின்பண்டுநன்றே
வியந்துனக்குள்ளதருளும்பஞ்சாக்கரமெய்ப்பொருளோ
டியைந்தவைநாக்காதிருக்கறியாதுடலாயிருந்தே (உஉ)

இருந்தேன் மலத்திலளற்றினையாய்நலனேதுமில்லேன்
பொருந்தேனடியர்குழாத்தைப்பொருந்துவல்புல்லியனாத்
திருந்தேன் றிருந்தும்வகைகளெல்லாஞ்செய்துநின்றின்றநான்
மருந்தேயனையபஞ்சாக்கரதேவன் மலர்ப்பதமே. (உங)

பதமலர்கண்டோரொறுழ்ப்பசுரோர்திபதிகுறுகா
ரிதமருள்செங்கைகண்டோர்பிரமன்கையெழுதப்படார்
கதமலையீருரிபோர்த்தருள்பஞ்சாக்கரவனுதன்
மதவிழிகண்டோர்துரப்பர்மதவேள்மலர்க்கணையே (உச)

கணையுண்டதேருமிருளுண்ணுமாழியுமக்கணையும்
பிணையுண்டதேரைப்பரிக்குஞ்சிலையும்பிறங்கவெல்லா
மணைவொன்றவாக்கும்வலவனுமேங்கவசித்ததென்ப
வினையொன்றுமில்லாத்துறைசையிற்பஞ்சாக்கரவின்பமே. உரு

இன்பமிதுவெனப்பஞ்சாக்கரவனிணைப்பதத்தி
லன்பிற்பிணைந்தவடியரல்லான்மற்றையாரறிவார்
துன்பிற்பிணைவதுகண்டுந்தொடர்ச்சியெல்லாஞ்சுகமா
வன்பிற்பிணைந்திடுமொலாதியோருமதித்தனரோ (உசு)

மதிப்பிக்குமென்னைத்தன்பாதத்தையாங்கேவயங்கிநின்று
முதிப்பிக்குமன்பையுறுசுவைத்தெள்ளமுதாயுகக்குங்
கதிப்பிக்குமாணவமாயைகன்மங்களின்கட்டறுக்கும்
பதிப்பிக்கும்பஞ்சாக்கரவன்றன்பாலெனைப்பாதங்கொண்டே உஎ

கொண்டலங்கண்டமுங்கொக்கரைக்கூத்துங்குறுநகையு
மண்டிலங்கொண்டவிர்செஞ்சடைக்கற்றையும்வான்பிறையுந்
தண்டளிர்ப்பாதமும்பஞ்சாக்கரவன்றயங்கருளு
முண்டனகண்டவன்றேயெனைமீட்டுமுமிழ்வின்றியே. (உஅ)

இன்றேயெஞ்ஞான்றுமொழியாதவின்பத்துறைபடிய
நன்றேயருளும்பஞ்சாக்கரநாதனளினபதத்
தன்றேவிரவுநிலையறியாததுபோலழுந்தி
யென்றேவிரவுமலமறியாமைவிடுத்தனமே, (உக)

விடுத்தனமென்றுபகர்ந்ததனால்விடுமோமலமு
மடுத்தனமென்றுபகர்ந்ததனாலண்மூமோவருளு
மடுத்தருள்பஞ்சாக்கரவன்மலர்ப்பதத்தேயழுந்திக்
கெடுத்தெனதியானெனுஞ்சேட்டைப்பகுப்புங்கெடினல்லதே. ()

அல்லவிர்கண்டனெண்டோளன்முக்கண்ணனழற்கரத்த
னெல்லுமிழ்மேனியன்பஞ்சாக்கரவனெனக்கிரங்கிச்
சொல்லியஞானந்துவந்துவம்பாற்றித்தொக்காருயிராய்ப்
புல்லியஞானமிரண்டுமெல்லாற்புகலொன்றில்லையே. (௧௧)

இல்லையிறைவனென்பார்க்குமிறையென்றமாத்திரையா
னல்லவருளும்பஞ்சாக்கரநாதனளினபதஞ்
சொல்லிநினையவிறைஞ்சப்பெற்றார்க்குத்துகட்கிழங்கைக்
கல்லியருள்வதினையுறல்வேண்டுங்கொல்காசினிக்கே. (௧௨)

காசினிமீதுபிறந்தவர்தம்முளுங்காவிரிசூழ்
நாசிறுநாட்டுற்பவித்தவர்தூயரவர்களுள்ளு
மாசறுபஞ்சாக்கரவன்வதியரசூரினுற்றோர்
தேசுறுதூயரவருளுந்தூயர்சென்றேத்துநரே. (௧௩)

ஏத்துநர்தம்முளிருந்துதன்பாதத்தையேத்துவிக்குஞ்
சாத்துநர்தம்முளிருந்துதண்போதலர்சாத்துவிக்கும்
பாத்துநர்தம்முளிருந்துநட்போடிகல்பாத்துவிக்கு
மாந்தன்பஞ்சாக்கரவண்ணலருளுமருளிதுவே. (௧௪)

இதுபுரிவேனெனவொன்றனைமேற்கொண்டிடைவிடுக்கு
மதுபுரிவேனென்றடுக்குமயர்க்குமற்றோருயிரிற்
சதுவியதன்மைகரிசறுத்தாண்டபஞ்சாக்கரவன்
முதுநலமுற்றுமுற்றதுமுற்றின்புந்திளைத்திடுமே. (௧௫)

திளைத்திடுந்தன்மையிற்றோயிருக்குந்திகழவருள்
விளைத்துமற்றேனையிடங்களில்வேறாயிருக்கும்விண்ணின்
முளைத்தெழுவெண்மதிக்கண்ணியன்பஞ்சாக்கரவன்முன்னோன்
வளைத்தழும்பாளன்மெய்ம்மாதவர்போற்றியமாதவனே. (௧௬)

மாதவம்யாதும்புரிந்தறியேன்வண்மலர்ப்பதத்துப்
போதலர்நீரும்பொழிந்தறியேனெதிர்போதலுமே
வீதைதசோலைவிளைசூழ்துறைசைப்பஞ்சாக்கரவன்
றீதறவாண்டவிரங்கினையென்னென்றுசெப்புவதே. (௧௭)

செப்பற்கரியனசிந்தைக்கரியனசேர்பொருளொன்
றொப்பற்கரியனவுள்ளேவிளைவியொண்மாமதிபோற்
பப்புற்றவாணவம்பாற்றிவிருவனபண்பினர்க்கு
வைப்பிற்பொலிவனபஞ்சாக்கரவன்மலரடியே. (௧௮)

அடியோரிரண்டி னுலகொருமூன் றுமடங்கியதால்
வடிவாளிவார்சிலைவயகந்தாங்குமதுகையதான்
முடியாமுதல்வன்பஞ்சாக்கரமீளிமுழுமணிநேர்ப்
படியோரிறையுமுருளிடமில்லாப்பரப்பினதே. (௩௯)

பரப்புற்றதேர்க்கமைபாகனும்பாகப்பயர்தவனு
மிரப்புற்றுநாடவெட்டாதிறந்தோங்கினவின்பவெள்ளம
மிருப்புற்றவன்பர்க்கருளும்பஞ்சாக்கரமெய்ப்பொருடன்
குருப்பெற்றவேணிமுடியுங்குழைகழற்பாதமுமே. (௪0)

பாதங்களுன்கும்வைத்தானவைநல்கும்பதங்கள்வைத்தான்
வேதங்களுன்கும்வைத்தான்விளையாக்கலிவீறவைத்தான்
பூதங்களாதிவைத்தான்புனையாதபுகர்மலத்தி
னேதங்கள்பாறவைத்தானெழிற்பஞ்சாக்கரவிறையே (௪௧)

இறைவீற்றிருந்தபஞ்சாக்கரநாதனிறைசெலுத்து
முறைநாடினேனைமுறைமுறையாங்கொன்முகிழ்ப்பவற்றுளை
மறையாயிருப்பதொன்றின்றுகவெங்கும்வதிந்தறிந்து
பெறயாவருக்குமவையவராலுய்க்கும்பெற்றியனே (௪௨)

பெற்றியொருவர்க்கறிவரியான்பெருவள்ளன்மையை
யுற்றறிந்தான்மற்றைவள்ளன்மைவள்ளன்மையாயுறுமே
பற்றிகலின்றிப்பயன்விழையாதுபஞ்சாக்கரன்போன்
முற்றுமளிப்பவர்யார்முடிவானவர்தம்முளுமே. (௪௩)

உள்ளும்புறமுமொருதன்மைக்காட்சியாதாமுலகி
னெள்ளும்பரிசினரேனும்வினைவழிநண்ணகிலார்
தெள்ளும்பெரும்புகழ்ப்பஞ்சாக்கரவன்றிருவடியை
விள்ளும்பரிசினரெல்லாம்விடுத்தும்விடுக்கலரோ. (௪௪)

விடுக்கலர்பற்றினொடார்வங்கதியைவிரும்பகிலார்
தொடுக்கலர்பஞ்சாக்கரவன்பதத்துச்சொன்மாமலர்கள்
கொடுக்கலராவியுடல்பொருளாங்குக்கொழுஞ்சுவைத்தேன்
மடுக்கலரன்பனைப்போனடிப்பார்க்கென்வருவதுவே. (௪௫)

வருவதும்போவதுமாயுழல்வீர்வம்மின்வந்தனிரோற்
றருநிதிசிந்தாமணிகாமதேனுவுந்தருவும்
பொருவறுபோகமெலாந்தரும்போகமெலாம்வெறுத்தா
லொருவருமுத்தியுநல்கும்பஞ்சாக்கரவொள்ளொளியே. (௪௬)

ஒளிக்குமுயிர்களுக்குள்ளேமலத்தினொளித்தவுயிர்க்
களிக்குந்தனுகரணாதியளித்தவவற்றொடிருள்
விளிக்குமுணர்த்தவுயிரினைப்பஞ்சாக்கரவிமலன்
றெளிக்கும்பளிக்கினிழல்போலுடலந்திரிவிக்குமே. (௪௭)

விக்குளிருமன்முயலகன் குட்டம்வெப்புப்பெருநோய்
தொக்குவயிற்றுறுநோய்சூலைநோயொடுசூழ்ந்தடினு
நக்குநலததருபஞ்சாக்கரவனளினபதம்
புக்குவிடினங்கணெல்லாமின்பாகப்பொலிதருமே. (௪௮)

பொலிந்தனமன்றேதணியுந்தணிந்தனவேபொலியுங்
கலந்தனமன்றதணக்குந்தணந்தனவேகலவுஞ்
சலந்தருவையத்தியற்கைதனைக்குறித்தாழன்மினோ
நலந்தருபஞ்சாக்கரவனைநாடிநயமின்களே. (௪௯)

கள்ளுண்டவாளிச்சுவையுண்டகார்முகக்காளையுடல்
விள்ளுண்டகண்ணன்பஞ்சாக்கரநாதன் விரைமலர்த்தா
ளுள்ளுண்டநெஞ்சுண்டவன்பெயர்பூண்டநன்னாவுமுண்டா
லெள்ளுண்டவல்வினைக்கஞ்சுவதின்றினியெய்தினுமே (௫௦)

எய்தடுமுப்புரத்தெண்ணியமூவரொரிபிழைப்பச்
செய்தவன்பஞ்சாக்கரவன்றிருவடித்தாமரைக்கீழ்ப்
பெய்தடச்சூழ்ந்தபெயராவினையைப்பிழைப்பித்துய்தி
வெய்தருளுந்திறத்தென்னினிவேறுவிளம்புவதே. (௫௧)

விளம்புவதென்னினிப்பஞ்சாக்கரவன்வெல்பூங்கழற்று
ளுளம்புகுவோர்கட்குறுவினையாதுமுறாதுமெய்யே
களம்படுசெந்தீக்கதுவினிழலுடல்காயுங்கொலோ
வளம்படுபுற்போலணைந்துடனீங்கியதாருயிரோ. (௫௨)

உயிர்தாமுயிர்க்குமுடலினல்லாதின்பதுன்பமொன்றும்
பயிலாபிறவுடலெங்குமிருந்துமப்பண்பினவாற்
செயிர்தீர்ந்துபஞ்சாக்கரவன்றிருவடிசென்றுபற்றின்
மயராருடலமிருந்தும்பயனென்மருவுவதே. (௫௩)

மருவுவதொன்றையரிதுபஞ்சாக்கரவான்பொருளி
னருள்வழியன்றியொருவனுமொன்றையரிதுமன்ற
வொருவனுமொன்றைமற்றொன்றையுறலுமெல்லாமவன்றன்
றிருவடியேயென்றுசிந்திகண்டாய்மலந்தேய்ந்தறுமே. (௫௪)

அற்றாலுமென்னைபுறத்தேபயில்பொருளானவெலாங்
கற்றாலுமென்னையரிதாகியகல்விகாசில்புகழ்
பெற்றாலுமென்னைபஞ்சாக்கரநாதன்பிறங்கருளி
லுற்றாலும்யானெனதென்னுஞ்செருக்கொழியாவிடினே. (௫௫)

விடுக்குங்கணையெறுழோர்திமனைவிவிலங்கலந்தோட்
படுக்குங்கலனுமொருபொருளேகொண்டபண்ணவன்சீர்
கொடுக்குந்துறைசைப்பஞ்சாக்கரநாதன்குலப்புகழைத்
தொடுக்கும்பரிசுபெற்றாம்பெறுமாறின்றுசூழ்பவமே. (௫௬)

பவம்பலகோடிவருமாறுநாவிற்பயிற்றியிட்ட
லவம்பலகோடியும்பஞ்சாக்கரனைப்புகழ்ந்தறுத்தாந்
தவம்பலகோடியசிந்தையதாணினைந்தேதணந்தா
நிவந்தபல்கோடியுடற்றீங்கிறைஞ்சுபுநீத்தனமே. (௫௭)

நீத்தனங்காணினிகழுஞ்சுகமெனதியானிலவா
பாத்தனங்காணிற்படுவதொன்றில்லைபஞ்சாக்கரவன்
பூத்தசெந்தாமரைத்தாளுஞ்சரமும்புன்மூரணிலா
யார்த்தசெவ்வாயுமுகமுமெல்லாமின்பத்தேயெழுமே. (௫௮)

எழுந்ததுபஞ்சாக்கரவன்றிருவருளெங்குமதில்
விழுந்ததென்புல்லறிவாங்கேயருளாய்மிளிர்ந்தனவா
லழுந்தியபாசமென்றெண்ணியமாயையருவினையுந்
தழுந்தரம்வேறினியில்லையின்பொன்றேதலைப்பட்டதே (௫௯)

பட்டதுபாசமென்பாரதுமாயும்படியறியா
ரொட்டியதாரருளென்பாரஃதுறுமுண்மையெய்யா
ரட்டுலகெல்லாமளிக்கும்பஞ்சாக்கரவண்ணலருண்
முட்டறுஞானமுகிழாவுளம்படைமூர்க்கர்களே. (௬௦)

மூர்க்கரைப்போலமுதுமாதவர்க்குமுனிவுசெய்து
பார்க்குளெஞ்ஞான்றும்பருவருவேனையும்பார்த்தருளாய்
சார்க்கதிர்தோகையெனவடியார்கள்கலந்தெதிர்நின்
றார்க்குந்துறைசைப்பஞ்சாக்கரநாதவருட்குருவே. (௬௧)

குருமணிமோலித்துருவன்பிணித்தகொழுங்கயிற்றி
னொருவுதல்கோளுக்கிலையெத்திசையினுறினுமவ்வா
றருண்மணியாகியபஞ்சாக்கரவவடியேனுநின்
றிருவடிநீங்காத்திறம்யாங்கிருப்பினுஞ்செய்தருளே. (௬௨)

அருணடமாடியபஞ்சாக்கரவன்முன்னைந்தொழில்கொண்
டருணடமாடியவம்பலவாணனெனக்களித்த
திருநடங்காணிற்செயிலைவிழுங்கித்திசைவிழுங்கி
யுருநடமாடவெனுள்ளம்விழுங்கியுகந்ததுவே. (௬௩)

உகந்தவனெல்லாப்பொருட்கும்பஞ்சாக்கரவுத்தமனை
யகந்தனிற்சற்றேயடிப்பிற்சதிகளெல்லாமடிப்ப
ரிகந்திடிற்சற்றேயெழான்குகோடிநரகுள்வல்லே
புகுந்துபல்லூழிபெயர்ந்துமெழாதுபுழுங்குவரே. (௬௪)

புழுங்கும்பெரும்பழிவந்தாலுமென்னின்பம்போர்த்துளத்தை
விழுங்கும்பெரும்புகழ்வந்தாலுமென்வினைப்பாலதென்
றழுங்கும்படியதன்றேயருட்பஞ்சாக்கரவன்பதத்
தொழுங்கும்பெருநிலைக்கூறவற்றாலில்லையுற்றதில்லே. (௬௫)

தில்லென்றுசெந்தீதிரையினிருவினுநீடுசெல்லல்
கல்லென்றுதீயதிறத்தினெடும்பிணங்காய்ந்துயர்
தல்லொன்றிவாளாங்கலையாதுபஞ்சாக்கரவனருள்
புல்லொன்றுபாரங்கழிப்பதென்றேயின்பம்பூணுகவே. (௬௬)

பூணுங்கடவுளைப்பஞ்சாக்கரவனைப்பூண்டுகொண்டு
சாணுங்கடனல்வருவினைமாய்க்குங்கடனதன்றி
மாணுங்கரிசுடற்கேன்றவினையைமறுப்பவுழந்
தேணுங்கெடேன்மின்குறுகாதொழியாவெறுமுடைத்தே. (௬௭)

உடைத்தைங்கலையும்பரானந்தவின்பமுறப்பயிற்றி
விடைத்தங்குமேவுமொழியாவினையின்விறன்முருக்கித்
துடைத்தங்கருளும்பஞ்சாக்கரநாதன்சுடர்ப்பதத்து
ளடைத்தங்கிருப்பவறியாதுளமயல்விட்டனமே. (௬௮)

விட்டனம்யானெனதென்னுஞ்செருக்கைவிடுத்தலொடுங்
கெட்டனமத்தகுசேட்டினையேகிளர்வாழ்க்கையெனப்
பட்டனம்பஞ்சாக்கரவன்பதமலர்ப்பூசனையே
தொட்டனமிந்தத்தொடர்பினையாவர்துளக்குநரே. (௬௯)

துளக்கும்வினையுடனிற்பத்தொகுமுயிர்வாங்கலெவ்வா
றளக்கற்கரியபஞ்சாக்கரநாதனென்றையுறன்மின்
வளக்குஞ்சரந்தன்வயிற்றுட்செறிவினைவாங்கிக்கொண்டு
விளக்கட்கனிதன்புறம்விடல்கண்டனமேதினிக்கே. (௭௰)

மேதினிமீதும்விரவுவதிவினையேன்சிரத்தும்
போதுவவீதென்னவற்புதம்போக்கின்மறைமுடியு
மாதவர்நெஞ்சுமலையான்மடந்தைவளைக்கரமு
நீதியிற்றைவரும்பஞ்சாக்கரவனெடும்பதமே. (எக)

பதந்தரவல்லவன்பஞ்சாக்கரவன்பசுபதிநல்
விதந்தருமீசனிறையெட்டுருவத்தனெண்குணத்தான்
சுதந்திரமுள்ளவனென்றுசொல்பாத்திரள்சூழ்ந்தவர்க்குங்
கதந்தருவல்வினைகாலதனூறுகடந்திறுமே. (எஉ)

இறுகின்றமாலையதாக்கையிதுதனைப்பேணிக்கொண்டே
தெறுகின்றவல்வினைவாயழிவேனைச்சென்றேத்துநர்பா
லுறுகின்றபஞ்சாக்கரவனவ்வூழ்வினைதன்னடியா
லறுகின்றதாக்கியஞ்சேலிங்கண்வாயென்றருளினனே. (எங)

அருள்கின்றகாலமெஞ்ஞான்றும்பஞ்சாக்கரவாண்டகைக்கா
மிருள்கின்றவாணவத்தேசிடந்தெய்த்தின்புந்துன்பந்துய்த்துத
தெருள்கின்றிலாவுயிர்க்கேசென்றுசேரும்பருவங்கண்டாய்
மருள்கின்றவன்னெஞ்சமேமதியாயின்றுவாய்த்திடுமே. (எச)

வாய்த்ததுடலிதுபஞ்சாக்கரவன்மலர்ப்பதந்தை
யேத்துதலாலென்றிறுமாந்திருந்தவெனெண்ணமெல்லாந்
தித்தெறுபஞ்சாய்ச்சிதையப்பலசநிசென்றுசென்று
பூத்திடுமொறுபுரட்டியதாற்புல்வினையடுத்தே. (எரு)

அடுத்தவினைக்கினியஞ்சேன்பஞ்சாக்கரவாரியன்முன்
விடுத்திருண்மூழ்குப்பிழையிற்பருவம்விளைத்துடலங்
கொடுத்தங்கும்விட்டிதுசாறும்வினைத்தகுற்றங்களைநீத்
தெடுத்தவனின்னுமெடுப்பனென்றுண்மையையெண்ணினனே.

எண்ணமெலாந்தனிணையடியேறவைத்தானியம்பும்
வண்ணமெலாந்தன்பெயராகவைத்தனன்வாருடலிற்
பண்ணலெலாந்தன்பணியாகவைத்தனன்பண்ணவர்கூ
ழுண்ணல்பஞ்சாக்கரவேந்தலருளுமிதற்புதமே. (எஎ)

அற்புதமேனியனுந்திருச்சிற்றம்பலவனறற்
புற்புதம்போலுருக்கொண்டபஞ்சாக்கரபூரணனைச்
சிற்பரமென்றுன்னுவாறறியார்செயிர்தீர்தொழிலைந்
துற்பவமாக்குமுருவத்தினுண்மையுமுன்னலரோ. (எஅ)

உன்னியகாலையுறுவாயினிக்குஞ்சற்றேயயர்ப்பி
னன்னியமாகலகன்றேகவந்துமனனியமாய்
மன்னியபஞ்சாச்கரவன்வயங்கருளோங்கியக்கீற்
பொன்னியல்காலைப்புணையிருள்போன்மலம்பொன்றுவதே. ( )

பொன்றுஞ்சுமுன்றிலுடையவராகப்பொலிதரினு
மின்றுஞ்சுவேலையஞ்சுவர்வேலர்வெருவுவராற்
சொன்றுஞ்சுதேவரைத்தேவருமஞ்சுவர்கோகனகத்
தென்றுஞ்சுபஞ்சாக்கரவன்றிருவடித்தேசினர்க்கே (அ0)

தேசிகநாதன்சிவஞானதேவன்செங்கைத்தலமுன்
வீசிநின்றாடியவர்பலவாணன்வியனுலகம்
பேசியபஞ்சாக்கரவன்பிறங்கருட்டாண்மலனாக்
கூசிநின்றேத்தியமாதவத்தார்க்கென்குறையுளதே. (அக)

குறையுண்டநெஞ்சும்பழியுண்டசெய்கையுங்குற்றமெலா
முறையுண்டவாக்குமெனக்களித்தானுற்றுளாரெவர்க்கு
நிறையுண்டவாக்கும்புகழுண்டசெய்கையுநீடுமின்பப்
பொறையுண்டநெஞ்சுமளித்தான்பஞ்சாக்கரபூரணனே (அஉ)

பூரணன்பஞ்சாக்கரவனென்செய்யுமபுலைநெஞ்சமே
யாரணமார்க்கம்விடுத்தேயரவகலல்குனல்லார்
வாரணிகொங்கைமுயக்கேயமர்ந்துவருந்திடும்பைக்
காரணமேதொருத்தாயதுகூட்டுங்கடனவற்கே. (அங)

அவனென்றுலகம்புகழும்பஞ்சாக்கரவாண்டகையை
யெவனென்றுமுன்னியிகந்தனையாலெனிமூதைநெஞ்சே
பவன்றவன்சங்கரன்பார்ப்பதிபாகன்பரன்சிவனு
மவனென்றுதேறியொழியாயொழியாவுறுபகையே. (அச)

உறுபகையாளர்துவன்றினுநட்பினரோங்கினுமென்
முறுகியவின்பமடுப்பதுண்டேற்பகையான்முருக்கப்
பெறுவதொன்றில்லையின்றுங்குளதேற்பெயராதுறவா
னிறுவவுநீக்கவும்வல்லன்பஞ்சாக்கரநின்மலனே. (அரு)

நின்மலன்பேரறிவாளன்பஞ்சாக்கரநிர்க்குணன்மற்
றன்மலத்தாழ்புல்லறிவுடையேனுடனுயமர்ந்து
தன்மலர்ப்பாதந்தலைத்தந்துந்தாழ்விலன்சார்களங்க
வின்மதிவாழும்வெளிக்கென்னைதாழ்வுவிரவுவதே (அசு)

விரவியவான்வளிதீவிரிநீர்வியன்பாரவையாய்ப்
பரவியபான்மதியாய்க்கதிர்கால்பகல்வானவனாய்ப்
புரவியலாருயிராய்நின்றபஞ்சாக்கரப்பொருளைக்
கரவியல்சிரருண்மாறுதுகாணுங்கடனரிதே. (அஎ)

அரிதுதன்பாதந்தனைவாருயிர்க்கெனவன்றுதொட்டுக்
கரிசறுமூர்த்திதலந்தீர்த்தமாயமர்காரணனை
விரிபுகழ்ப்பஞ்சாக்கரவனைமெய்யன்பினுளத்தே
பரிபவமிலார்பெறுர்மலந்தான்செய்பரிபவமே. (அஅ)

பவமெழுகோடியெடுப்பினுமென்னைபஞ்சாக்கரவ
னவமவாகப்புணருந்தொறுமின்பால்குகின்ற
நவமலியிப்பவம்போல்வாய்ப்புநின்றதன்மையின்றி
யவமுறினிந்தப்பவமுங்கடுகவவிதனன்றே. (அகூ)

நன்றேயடுப்பதருளிற்கலந்தாலத்தவர்க்கு
மின்றேயிறந்தபவங்களினீட்டுமிருவினையுட்
சென்றேபயப்பவெவையவைபஞ்சாக்கரச்செய்யரு
ணின்றேபுணர்த்துப்புணர்த்திடுமேருநிலைவைக்குமே. (கூ0)

வைப்பாயிருக்கும்பஞ்சாக்கராநன்மலர்ப்பதமே
துப்பாயழுந்தின்மலநேர்வினையுமெரித்தரும்ப
ரோப்பாயவியும்பதைப்பிற்கடுகுமுயர்மலையா
மிப்பாலனநெஞ்சமேநினக்காம்வழியெய்துகவே. (கூக)

எய்துவதிங்கிடையொன்றில்லைபஞ்சாக்கரவிறைவ
னுய்திறநாடிமுன்செய்வினையூட்டியொழிக்குங்கண்டாய்
நைதிறந்தீவினைக்கெண்ணனுநல்லதென்றோன்றனையே
செய்திறநாடலும்வேண்டாவவனடிசிந்திநெஞ்சே. (கூஉ)

நெஞ்சேநினக்குநெடும்பகைநீயந்நிலையறியா
தஞ்சேலெனவருள்பஞ்சாக்கரவனவையவரா
லெஞ்சாதுநீமுன்னரீட்டியகூட்டியிடும்பொழுது
நஞ்சேயெனமுன்னிலைபகையாகவுநாடினையே. (கூங)

நாடுவதெல்லாமருளும்பஞ்சாக்கரனற்பதமே
கூடுவதெல்லாமவனடியார்தங்குழாத்திடையே
வீடுவதெல்லாம்பிவிலர்சேர்ச்சியென்றுய்விடினே
நீடுறும்வேறின்பமுண்டேனும்வேண்டாநெடுநிலத்தே. (கூச)

நிலங்காலகழ்ந்துநெடுமாலறியாநிகரில்பத
மலங்காலறுக்கும்பஞ்சாக்கரநாதன்மலியருளா
னலங்காமுருவெனக்கேண்மையின்முற்றுநன்றாய்த்தளித்தான்
கலங்காமையின்மையின்மற்றதற்கேற்குங்கடனிலனே. (௯௫)

இலம்படலாவதுபஞ்சாக்கரவனெழிலருளி
னலம்புரிவோர்க்குலகந்துறுசெல்வங்கணண்ணுவதே
குலம்புரிசெல்வங்களாவனகோதிலடியவர்க்குச
சலம்புரிவையகத்தாறிலம்பாடுதழைப்பனவே. (௯௬)

தழைக்கின்றபோதிவனமுஞ்செந்தாடொழுகாலமிதென்
றழைக்கின்றவன்பர்கள்சோடையுங்கண்டாரகமுழுதுங்
குழைக்கின்றபஞ்சாக்கரவன்மெய்க்கோலமுங்கோதிறவ
மிழைக்கின்றகுழலுமென்மனநீங்காதிருப்பனவே. (௯௭)

இருப்பனநெஞ்சன்பல்லூழியெல்லாம்பெயர்ந்தாலுமெம்பால்
விருப்பினுறுதலரிதெனப்பஞ்சாக்கரவிமலன்
பொருப்பினைவாங்கிற்றெனவென்னையாண்டபுதுமையினுற்
கருப்படுமாறினிச்செல்லவொட்டானருட்காப்பிடுமே. (௯௮)

இடுவதெல்லாமவன்றன்குணமென்குணமேற்றல்வினை
யடுவதெல்லாமவன்றன்குணமென்குணமாக்கன்மெய்ம்மை
தொடுவதெல்லாமவன்றன்குணமென்குணந்தோல்வியிவை
படுவனவாயினும்பஞ்சாக்கரவன்பரிவுளனே. (௯௯)

உளநின்றுகாணிற்றெளிப்பனங்கேயெனுளமொளிப்பின்
வெளிநின்றுகாணப்படுவன்விரிகடற்றெள்ளமிழ்துந்
தெளிவுண்டதேறலுங்கைப்பவென்சிந்தையெலாமினிப்பன்
பளகறுத்தாண்டபஞ்சாக்கரநாதபசுபதியே. (௧௦௦)

பஞ்சாக்கரதேசிகரந்தாதி முற்றியது.

திருச்சிற்றம்பலம்.

மெய்கண்டதேவர்திருவடிவாழ்க.

சிவஞானயோகிகள்திருவடிவாழ்க.